12T2

# அரையாண்டுப் பொதுத் தேர்வு, டிசம்பர் - 2017

-----

பதிவெண் | | | | | | |

## வகுப்பு 12

நேரம்: 3.00 மணி **பகுதி - I - தமிழ் இரண்டாம் தாள்** மொத்த மதிப்பெண்கள்: 80

**(உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம் பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன்)**

**அறிவுரை:** 1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பென்சில் பயன்படுத்தவும்.

**குறிப்பு:** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

**I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை எழுதுக:** **3×4=12**

1) நாடகத் தமிழின் சிறப்பியல்புகளாகப் பரிதிமாற்கலைஞர் கூறுவன யாவை?
2) நாடு என்னும் பற்றால் சமரசத்தை இழப்பது பற்றி திரு.வி.க. உரைப்பன யாவை?
3) கவிதை என்பது யாது என்ற வினாவிற்கு வோர்ட்ஸ்வொர்த், கோலரிட்ஜ் ஆகியோர் கூறும் விளக்கங்கள் யாவை?
4) பழந்தமிழ் மாந்தர் பெரிய முயற்சியையே மதித்து ஒழுகினர் என்பதனை விளக்குக.
5) உலகில் சமரசம் பரவாமைக்குக் காரணங்களாகத் திரு.வி.க. கூறுவன யாவை?

**II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை எழுதுக. ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை எழுதுக:** **3×4=12**

6) மக்கள் நாகரிகத்தோடு மாட்டிற்கும் தொடர்புண்டு என்பதனைப் பாவாணர் கூறுமாறு யாங்ஙனம்?
7) செல்வம் நிலைபேறு உடையதன்று - என்பதை நாலடி எங்ஙனம் நயம்பட நவில்கிறது?
8) ஏற்றத்தாழ்வில்லாத சமுதாயம் அமைய மு.வ. காட்டும் வழிகள் யாவை?
9) நாயக்கர் கால தந்தச் சிற்பக்கலை பற்றி எழுதுக.
10) விறலுடைய இளைஞர்க்கும் மாடு உவமையாகக் கூறப்பட்டதனை விளக்குக.

**III. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் இருபது வரிகளின் மிகாது விடை எழுதுக:** **1×6=6**

11) தமிழ் - உயர்தனிச்செம்மொழி - இத்தலைப்பின் கீழ்ப் பரிதிமாற்கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து எழுதுக.
12) 'இச்சகம் பேசுதல் இழிவு' என்பதனை அறநெறிச்சாரம் எவ்வாறு எடுத்துரைக்கிறது?

**IV. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக:** **2×10=20**

13) 'பால்வண்ணம் பிள்ளை' **அல்லது** 'சட்டை' என்னும் சிறுகதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் எழுதுக. **(அல்லது)**
'மகன்' **அல்லது** 'மூக்கப்பிள்ளை வீட்டு விருந்து' என்னும் சிறுகதையில் இடம்பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

14) 'கிழிசல்' **அல்லது** 'பழிக்குப்பழி' என்னும் சிறுகதையில் நும் மனம் கவர்ந்த கதைமாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க. **(அல்லது)**
நீவிர் விரும்பிய ஒரு சுற்றுலாவுக்குச் செல்ல முடியாது தடையேற்பட்டு அதனால் வருந்தியதாக ஒரு நிகழ்வைப் புனைந்து இருபக்க அளவில் ஒரு கட்டுரை எழுதுக.
**(அல்லது)**
சொந்த வீடு கட்டிக்கொள்ளக் கடன் வாங்கி அல்லற்பட்ட இருவர் சந்தித்து உரையாடுவதுபோல நும் கற்பனையில் இருந்து ஒரு கட்டுரை வரைக.

**V.** 15) **பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து,, அதில் அமைந்துள்ள மையக்கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு,, முரண், அணி, சந்தச்சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக:** **1×10=10**

புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்!
பொதுவுடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
புனிதமோ டதை எங்கள் உயிரென்று காப்போம்
இதயமெலாம் அன்பு நதியினிலே நனைப்போம்
இதுஎன தென்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம்
உணர்வெனும் கனலிடை அயர்வினை எரிப்போம்
ஒருபொருள் தனியெனும் மனிதரைச் சிரிப்போம்
இயல்பொருள் பயன்தர மறுத்திடில் பசிப்போம்
ஈவதுண்டாம் எனில் அனைவரும் புசிப்போம்.

- *பாரதிதாசன்*

குறிப்பு: காதுகேளாத மாணவர்களுக்கு மட்டும் VI மற்றும் VII வினாக்களுக்கு மாற்றுவினா வழங்கப்பட்டுள்ளன.

**VI. பின்வரும் தொடர்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் தமிழாக்கம் தருக: 3×2=6**

16) East or West, home is the best.
17) Slow and steady wins the race.
18) Pen and ink is wits' plough.
19) Failure is the stepping stone of success.
20) Haste makes waste.
21) The old fox is caught at last.

**VII.** 22) **பின்வரும் பழமொழிகளுள் ஒன்றினை விளக்கும் வகையில் வாழ்க்கை நிகழ்வில் அமைத்து (பத்து வரிகளில்) எழுதுக: 1×4=4**

அ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும் ஆ) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
இ) ஆழம் அறியாமல் காலை விடாதே **(அல்லது)**

'சிற்பி' **(அல்லது)** 'எதிர்காலத் தமிழகம்' என்னும் தலைப்பில் சொந்த படைப்பாக கவிதை ஒன்றினை எட்டு அடிகளுக்குக் குறையாது பத்து அடிகளுக்கு மிகாது எழுதுக.

**குறிப்பு: காதுகேளாத மாணவர்களுக்கான மாற்று வினா. 5×2=10**

**VI மற்றும் VII-ல் உள்ள வினாக்களுக்குப் பதிலாக காதுகேளாத மாணவர்கள் பின்வரும் பத்தியைக் கவனமாகப் படித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு வினா எண் 16 முதல் 22 வரையில் உள்ளவற்றில் எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் ஏற்ற விடையை எழுதுக.**

அறிவியல் கண்முன் பல விந்தைகளை ஆற்றி வருகிறது. அத்தகைய விந்தைகளில் ஒன்று கணினி எனப்படும் கம்ப்யூட்டர்.

வானொலி, தொலைக்காட்சி, வானவியல், கணக்கியல் போன்ற பல்வேறு துறைகளில் அறிவியல் நுழைந்து புருவத்தை உயர்த்தக்கூடிய சாதனைகளைச் செய்திருக்கின்றது. இத்தகைய சாதனைகளில் மகத்தானது கணிப்பொறி எனப்படும் கம்ப்யூட்டர்.

கம்ப்யூட்டர், டிஜிட் என்பன இலத்தீன் மொழிச்சொற்கள். கம்ப்யூட்டர் என்பதற்கு கணக்கிடுதல் என்பது பொருள். டிஜிட் என்பதற்கு எண்கள் விரல் என்பது பொருள். முதன் முதலில் கணக்குப் போடுவதற்கு மக்கள் கைகளையே பயன்படுத்தியமையால் இப்பெயர்கள் காரணப்பெயர்களாய் அமைந்தன.

இன்றைய கணிப்பொறியின் அடிப்படையாக விளங்கும் எண்கள்ளை நம் நாட்டிற்கு குதிரை வாணிகம் செய்ய வந்த அரேபியர்கள் கற்றுச் சென்றனர். எனவே கணிப்பொறியின் முன்னோடிகள் நம் நாட்டவர் என்பது உண்மை.

மனிதன் மூளைக்குச் சவால் விடும் தனித்தன்மை கொண்ட கணிப்பொறியை டாக்டர். ஜான் பாண் நாய்மன் என்பவர் 1945-ல் கண்டுபிடித்தார். இதன் பின்னரே கணிப்பொறி வளர்ச்சியில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது.

**வினாக்கள்:**

16) அறிவியல் சாதனைகளில் மகத்தானது எது? ஏன்?
17) கம்ப்யூட்டர் என்பதன் பொருள் யாது?
18) டிஜிட் என்பதன் பொருள் யாது?
19) கம்ப்யூட்டர், டிஜிட் என்பன எந்த மொழிச்சொற்கள்?
20) கணிப்பொறியின் முன்னோடிகள் யார்?
21) தனித்தன்மை கொண்ட கணிப்பொறியை கண்டுபிடித்தவர் யார்?
22) எந்த ஆண்டிற்குப் பிறகு கணிப்பொறி வளர்ச்சியில் மறுமலர்ச்சி ஏற்பட்டது?

**VIII. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக: 10×1=10**

23) நல்லவைகளும் கெட்டவைகளும் பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன. **(வாக்கியப் பிழையைத் திருத்துக)**

24) வெந்தய செடிகளின் மேல் மின்னிடும் தங்க பூக்கள். **(தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக)**

25) கபிலபரணர் வளர்ப்பிறை ஒளியில் சுடுச்சோறும் காய்க்கறியும் உண்டனர். **(தேவையற்ற இடங்களில் அமைந்த வல்லின மெய்களை நீக்கி எழுதுக)**

26) 'டி.வி.யில் சீரியல் பார்க்காவிட்டால் லைஃபே போர் அடித்து விடும்' என்கிறாள் பாட்டி. **(பிறமொழிச் சொற்களை நீக்கி எழுதுக)**

27) மயில் கத்த, குயில் கரைய, கிளி பாடியது. **(மரபு வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக)**

28) வெடியங்காட்டியும் வெத்திலை போடறது ஒரு பளக்கமா? **(கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக)**

29) வலை - வளை அல்லது காண் - கான். **(பொருள் வேறுபாட்டை உணர்ந்து அதனைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்தெழுதுக)**

30) 'நமஸ்காரம்' என்று சாஷ்டாங்கமாக விழுந்தவனை ஆசிர்வதித்தேன். **(வடசொற் கலப்பை நீக்கி நல்ல தமிழில் எழுதுக)**

31) இளைஞர்கள் மன்றம் அமைத்து தமிள் வளர்க்க முடிவு செய்தனர். **(எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக)**

32) சமரசம் வாழ்வில் நுழைந்து ஆட்சிபுரியின் உலகில் போர் ஏது பூசல் ஏது புரட்சி ஏது. **(பொருத்தமான நிறுத்தற்குறிகளை இட்டு எழுதுக)**

----------